# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

புதன்கிழமை 10.02.2021

supeedsam.com

supeedsam@gmail.com







## இலங்கையின் அதியுயர் சேவை போட்டிப் பரீட்சையில்

# தமிழ் பேசும் எவரும் தேர்வாகவில்லை

### தொடரும் திட்டமிட்ட புறக்கணிப்பா என பரிட்சாத்திகள் கவலை

(ரக்ஸனா)

இலங்கையில் அதியுயர்ந்த சேவையாக கருதப்படும் (SLAS) இலங்கை நிர்வாக சேவையின் மட்டுப்படுத்தப்பட்ட SLAS (Limited) போட்டிப் பபீட்சை நேர்முகத் தேர்வு பட்டியல் வெளியிடப்பட்டுள்ளன. இந்த பட்டியலின் படி தமிழ் மொழி மூலமான பரிட்சாதிகள் எவரும் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை.


இலங்கை நிர்வாக சேவை போட்டிப் பபீட்சையானது திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட இரு பிரிவுகளில் நடைபெறுகின்ற நிலையில் கடந்த வருடம் 2020ஆம் ஆண்டு தைமாதம் திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பபீட்சைகள் நடைபெற்றிருந்தன.

02 ஆம் பக்கத்தில்...

## காத்தான்குடியில்

## 40 நாட்களின் பின்னர் 10 கிராம சேவர் பிரிவு திறப்பு





( ரீ.எல்.ஜவ்பர்கான்)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கடந்த டிசம்பர் மாதம் 31ம் திகதிமுதல் மூடப்பட்டிருந்த காத்தான்குடி நகரின் 10 கிராம சேவகர் பிரிவுகளிலும் வர்த்தக நிலையங்கள் நேற்று காலை முதல் திறக்கப்பட்டிருந்தன.

02 ஆம் பக்கத்தில்...

## பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி

## வழக்கு ஒத்திவைப்பு

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் எழுச்சிப் பேரணி தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன், யாழ்ப்பாணம் மாநகர முதல்வர்

02 ஆம் பக்கத்தில்...

### சட்டவிரோதமாக பொருத்தப்பட்டிருந்த

## மின்சார வேலியில் சிக்கி எட்டு வயது சிறுவன் பலி

(பொன்ஆனந்தம்)

திருகோணமலை - சம்பூர், சந்தனவெட்டை பகுதியில் சட்டவிரோதமாக பொருத்தப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முற்பகல் இந்த சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் கூறினர்.

02 ஆம் பக்கத்தில்...

## எமது மக்களுக்கு உரிமையும் இல்லை அபிவிருத்தியும் இல்லை

### இரா.சாணக்கியன் சபையில் ஆதங்கம்!

எமது மக்களுக்கு உரிமையும் இல்லை அபிவிருத்தியும் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கவலை வெளியிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கேள்வி நேரத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன் போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

02 ஆம் பக்கத்தில்...



## கிழக்கில் ஏழு உள்ளூராட்சி மன்றங்களுக்கு இவ்வாரம் புதிய தலைவர்கள்

கிழக்கு மாகாணத்தில் ஏழு உள்ளூராட்சி மன்றங்களுக்கு புதிய தலைவர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இதற்கான அறிவிப்பை சிசேட வர்த்தமானி ஊடாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்

02 ஆம் பக்கத்தில்...

## இம்ரான் கானை சந்திக்க எதிக் கட்சியினருக்கும் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்



(எப்.முபாரக்)

இலங்கை வரவுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானை சந்திக்க எதிர்கட்சியினருக்கும் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்தார்.

இம்ரான் கானின் விஜயம் தொடர்பாக கொழும்பில்

02 ஆம் பக்கத்தில்...

## யான் ஓயா பள்ளத் தாக்கின் விவசாய நிலப்பகுதியை விஷம் இல்லாத விவசாய வலயமாக மாற்றுவதற்கு நடவடிக்கை

### கிழக்கு மாகாண ஆளுனர்

( ஹஸ்பர் ஏ ஹலீம்)

யான் ஓயா பள்ளத்தாக்கின் விவசாய நிலப்பகுதியை விஷம் இல்லாத விவசாய வலயமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக கிழக்கு மாகாண ஆளுனர் அநுராதா யஹம்பத் தெரிவித்தார், திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் திங்கள் நடைபெற்ற கூட்டத்தில் ஆளுநரால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. யான் ஓயா திட்டத்தின் காரணமாக நிலங்களை இழந்த விவசாயிகளுக்கு புதிதாக நிலம் வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலை

02 ஆம் பக்கத்தில்...



## சுற்றுலா விடுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி களியாட்ட நிகழ்வில் ஈடுபட்ட 25 பேருக்கு தலா 4000 அபராதம் 14 பேருக்கு பிடியாணை



(ரீ.எல்.ஜவ்பர்கான்)

மட்டக்களப்பு கல்லடியிலுள்ள சுற்றுலா விடுதியொன்றில் (கிறீன் கார்டன் ஹோட்டல்) கொவிட் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி களியாட்ட நிகழ்வில் கலந்து கொண்ட 39 பேரில் 25 பேருக்கு தலா 4000 ரூபாய் வீதம் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தினால் அபராதம் விதிக்கப்பட்டதுடன் மேலும் 14 பேருக்கு பிடியாணை பிறப்பிக்கப்புட்டுள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 15ம் திகதி மேற்படி சுற்றுலாவிடுதியில் கொவிட் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி களியாட்ட நிகழ்வை நடாத்தியவர்கள் மீது நீதிமன்ற அனுமதியின் பேரில் பொது சுகாடதார பரிசோதகர்கள்

02 ஆம் பக்கத்தில்...






## ஊடகவியலாளர்களுக்கு விரைவில் தடுப்பூசி

ஊடகவியலாளர்களுக்கும் கோவிட் -19 தடுப்பூசியை வழங்குமாறு வெகுஜன ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லா கோவிட் -19 பணிக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## நேற்றுவரை இலங்கையில் 174,193 பேருக்கு தடுப்பூசி

கொவிட் 19 க்கு எதிராக நேற்றுவரை மொத்தம் 174, 193 நபர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக தலைமை தொற்றுநோயியல் நிபுணர் டாக்டர் சுதத் சமரவீரா தெரிவித்தார்.

நேற்று மட்டும் 6,431 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## நுண்கடனால் வட, கிழக்கு மாகாண பெண்களுக்கே அதிக பாதிப்பு

இலங்கையில் நுண்கடனைசெலுத்திக்கொள்ள முடியாத சூழ்நிலை காரணமாக கடந்த சில வருடங்களில் மாத்திரம் சுமார் 200 பெண்கள் தற்கொலை செய்துக்கொண்டுள்ளதாக பிரபல திரைப்பட நடிகையான நிரஞ்ஜனி சண்முகராஜா தகவல் வெளியிட்டுள்ளார்.

அதேபோன்று, நுண்கடனைசெலுத்திக்கொள்ள முடியாத பெண்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்படும் அதேவேளை, நுண்கடனை செலுத்துவதற்கு பதிலாக பாலியல் லஞ்சமும் கோரப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நுண்கடன் திட்டத்தின் ஊடாக வடக்கு

02 ஆம் பக்கத்தில்...







## இம்ரான் கானை சந்திக்க எதிக் கட்சியினருக்கும்...

ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துவெளியிட்ட அவர்:

இலங்கைக்கு வருகைதரவுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானை சந்தித்து இலங்கை முஸ்லிம்களின் நிலைப்பாடு உள்ளிட்ட இலங்கையின் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாட நேரம் ஒதுக்கித்தருமாறு பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளோம்.

இதுவரை இது தொடர்பாக சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

எதிர்க்கட்சி தலைவருக்குக்கூட இதுவரை நேரம் ஒதுக்கப்படவில்லை.

பாகிஸ்தான் பிரதமரை எதிர்க்கட்சியினர் சந்திக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் உள்ளது என அறையக்கிடைத்தது. ஜனநாயக நாடு என்ற ரீதியில் இம்ரான் கானை சந்திக்க எதிக்கட்சியினருக்கும் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என தெரிவித்தார்.

## கிழக்கில் ஏழு உள்ளூராட்சி மன்றங்களுக்கு...

நா.மணிவண்ணன் அறிவித்துள்ளார்.

தம்பலகாமம் பிரதேச சபைக்கான தவிசாளர் தெரிவு இன்று புதன்கிழமை 10 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கும் சேருவில பிரதேச சபைத் தவிசாளருக்கான தவிசாளர் தெரிவு அன்றைய தினம் மு. ப. 11.30 மணிக்கும் பிரதேச சபை சபா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபைக்கான தவிசாளர் தெரிவு 11ம் திகதி வியாழக்கிழமை காலை 09 மணிக்கு பிரசே சபை சபா மண்டபத்திலும், ஏறாவூர் நகர சபைக்கான தலைவர் தெரிவு, அதே தினத்தன்று காலை 11 மணிக்கு நகர சபை சபா மண்டபத்திலும், மண்முனை பிரதேச சபை தவிசாளர் தெரிவு, பிற்பகல் 02.30 மணிக்கும் நடைபெறவுள்ளது

பொத்துவில் பிரதேச சபைக்கான தவிசாளர் தெரிவு, 12ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பொத்துவில் பிரதேச சபை சபா மண்டபத்திலும், இறக்காமம் பிரதேச சபைக்கான தவிசாளர் தெரிவு, அதே தினத்தன்று பிற்பகல் 02.30 மணிக்கு இறக்காமம் பிரதேச சபை சபா மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

## யான் ஓயா பள்ளத் தாக்கின் விவசாய...

கமநல சேவைகள் உதவி ஆணையாளர் வரூணி சரவணந்தன் அளித்த சிறப்பு திட்டத்தின் படி.

யான் ஓயா பள்ளத்தாக்குக்கு சொந்தமான 500 ஏக்கர் நிலத்தில் விவசாய நடவடிக்கைகளுக்கு பூச்சிக்கொல்லிகள் அல்லது இரசாயனங்கள் சேர்ப்பது கண்டிப்பாக தடைசெய்யப்படும்.

இப்பகுதியில் உள்ள விவசாய நிலங்களுக்கு இரசாயனம் பயன்படுத்துவதால் ஏற்படும் அழிவைத் தடுக்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

புதிதாக கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் பல்லுயிரியலைப் பாதுகாக்கும் அதே வேளையில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட விவசாயிகளுக்கு கல்வி கற்பிப்பதற்கும் முன்மொழியப்பட்டது.

விவசாயிகள் இதுபோன்ற செயல்களைச் செய்கிறார்களா என்பதைக் கண்காணிக்க சிறப்புத் திட்டத்தைத் தயாரிக்குமாறு ஆளுநர் கமநல சேவைகள் உதவி ஆணையாளருக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில்கிழக்கு மாகாண பிரதமச் செயலாளர் துசித பி.வனிகசிங்க, ஆளுநரின் செயலாளர் எல்.பி. மதனாயக, மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் கலாமதி பத்மராஜா, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சட்டவிரோதமாக பொருத்தப்பட்டிருந்த...

காட்டு யானைகளை தடுப்பதற்காக சட்டவிரோதமாக குறித்த வேலி இடப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்திரன் ரஜீதன் என்ற 8 வயதான சிறுவனே உயிரிழந்துள்ளார்.

சட்டவிரோதமாக மின்சார வேலி குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

## காத்தான்குடியில் 40 நாட்களின் பின்னர்...

கடந்த டிசம்பர் மாதம் 31 ம் திகதி முதல் கொரோனா பரவல் அதிகரிப்பை அடுத்து காத்தான்குடி பிரதேச செயலகப்பிரிவின் 18 கிராம சேவகர் பிரிவுகளும் தனிமைப்படுத்தல் சட்டத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தது..

தொடரான அன்டிஜன் பரிசோதனைகளை அடுத்து குறித்த பிரதேசத்தின் 8 கிராம சேவையளர் பிரிவுகளில் ஏற்கனவே தனிமைப் படுத்தல் சட்டம் நீக்கப்பட்டது.

தொடர்ந்தும் கடந்த40 நாட்களாக 10 கிராம சேவகர் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் சட்டம் அமுலில் இருந்தது.இன்று9ம் திகதி முதல் 4 வீதிகளைத்தவிர 10 கிராமவேசகர் பிரிவுகளும் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்படுவதாக மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அறிவித்ததையடுத்து இன்று காலைமுதல் வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தததுடன் பாடசாலைகள் பள்ளிவாயல்கள் என்பனவும்திறக்கப்பட்டன.இத்துடன் வழமையான அலுவல்கள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மேலும் சில பிரதேசங்கள் இன்று காலை 06.00 மணி முதல் தனிமைப்படுத்தல் நிலையில் இருந்து விடுவிக்கப்படுவதாக இராணுவத் தளபதி ஜெனரால் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதன்படி, மட்டக்களப்பு மாவட்டத்தில்,

**162 ஏ காத்தான்குடி 06 தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு,**
**162 பீ காத்தான்குடி 06 மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு,**
**164 காத்தான்குடி 04 கிராம உத்தியோகத்தர் பிரிவு,**
**164 பீ காத்தான்குடி 05 வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு,**
**164 ஏ காத்தான்குடி 05 கிராம உத்தியோகத்தர் பிரிவு,**
**164 சீ காத்தான்குடி 04 மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு,**
**167 காத்தான்குடி 01 கிராம உத்தியோகத்தர் பிரிவு,**
**167 சீ புதிய காத்தான்குடி தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு,**
**167 டீ காத்தான்குடி மேல் கிராம உத்தியோகத்தர் பிரிவு,**
**167 ஈ காத்தான்குடி மத்திய கிராம உத்தியோகத்தர் பிரிவு**

என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமுர்த்தி பணிப்பாளர் நாயகத்துடன் மன்னார் தொழில் சங்கம் சந்தித்து கோரிக்கைகள் முன்வைப்பு







**( வாஸ் கூஞ்ஞ)**

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மன்னாருக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டபோது மன்னார் மாவட்ட சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மன்னார் மாவட்ட தொழில் சங்கம் பணிப்பாளரை சந்தித்து எட்டு அம்சக் கோரிக்கையை முன்வைத்து பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை (07.02.2021) சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆர்.பி.பி.திலகசிறி மன்னார் மாவட்டத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டபோது மன்னார் மாவட்ட சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மாவட்ட தொழிற் சங்கமானது பணிப்பாளரிடம் எட்டு அம்சக் கோரிக்கையை முன்வைத்து கலந்துரையாடல் ஒன்றை மேட்கொண்டிருந்தது.

இதில் முக்கியமாக சமூர்த்தி உத்தியோகத்தர்களுக்கு பதில் கடமைகளுக்கான கொடுப்பனவு, தளபாடங்கள் வசதிகள், இவர்களுக்கான உத்தியோகபூர்வமான அடையாள அட்டைகள், பெயர் பலகை அற்ற நிலைகள் போன்ற சம்பந்தமான பிரச்சனைகள் முன்வைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டன.

இவ் நிகழ்வின்போது மன்னார் மாவட்ட சமூர்த்தி உத்தியோகத்தர்கள் சார்பாக மாவட்ட மட்ட தொழில் சங்கத்தினால் பணிப்பாளர் நாயகத்தக்கு நினைவு சின்னமும் வழங்கப்பட்டது.

விரைவில் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான திணைக்கள அடையாள அட்டை பட்டதாரிகளாக இருக்கின்ற உத்தியோகத்தர்களுக்கான முகாமையாளர்கள் நியமனம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஊடகவியலாளர்களுக்கு விரைவில் தடுப்பூசி...

ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவின் ஆதரவின் கீழ் நடைபெற்ற கோவிட் -19 பணிக்குழு கூட்டத்தின் போது இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

கொவிட்19 தொடர்பான அனைத்து சம்பவங்களையும் அறிக்கையிட்டு வருவதால் ஊடகவியலாளர்கள் ஆரம்பத்தில் இருந்தே தொற்றுநோய்களில் முன்னணியில் உள்ளனர் என்பதை அமைச்சர் ரம்புக்வெல்ல எடுத்துரைத்துள்ளார்.

அமைச்சின் கூற்றுப்படி, சுமார் 6,000 ஊடகவியலாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர், அவர்களில் 1,150 பேர் மாகாண ஊடகவியலாளர்கள்.

பத்திரிகையாளர்களுக்கு தடுப்பூசி விரைவில் தொடங்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## சுற்றுலா விடுதியில் தனிமைப்படுத்தல்...

வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த வழக்கு மீதான விசாரணை நேற்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சீ.றிஸ்வான் முன்னலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது 25 பேருக்கு தலா 4000 ரூபாய் அபராதம் விதித்துடன் மன்றில ஆஜராகத் தவறிய 14 பேருக்கும் பிடியாணை உத்தரவை பிறப்பித்தார்.

பொது சுகாதார பரிசோதகர்களான ரி.மிதுன்ராஜ் எஸ்.அமிர்தாப் ஆகியோர் குறித்த வழக்கினைத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நுண்கடனால் வட, கிழக்கு...

மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பெண்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும், மலையகத்திலுள்ள பெண்களும் இதே நுண்கடன் பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருவதாக தொலைக்காட்சியொன்றில் நடந்த நிகழ்வில் இத்தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

## பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வழக்கு...

வி.மணிவண்ணன் உட்பட பல்வேறு நபர்களுக்கு எதிராக பருத்திதுறை நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்குகள் நேற்று திறந்த மன்றில் அழைக்கப்பட்டது. பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்ட நீதிமன்று, வழக்குகளை மார்ச் 29, மே 19 மற்றும் 20ஆம் திகதிகளுக்கு தவணையிட்டுள்ளது.

## எமது மக்களுக்கு உரிமையும் இல்லை அபிவிருத்தியும் இல்லை...

நவகிரி என்ற செயற்திட்டத்தில் அவசர வான்கதவு என்பதொன்று காணப்படுகிறது. 2010ம் ஆண்டிலிருந்து அவசர வான்கதவு என்பது எமக்கு கிடையாது. இவ்வாறான நிலையில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் போது குளத்தை அண்மித்த பகுதிகள் பாரியளவில் பாதிக்கப்படும். 2010ம் ஆண்டிலிருந்து பல கோரிக்கை விடுக்கப்பட்டும் இதுவரையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஒவ்வொரு வருடமும் மட்டக்களப்பு மாவட்டம் வெள்ளத்தால் பாதிக்கப்படுகிறது வெள்ளத்தால் மூழ்கடிக்கப்படுகின்றது. மக்கள் ஒவ்வெரு வருடமும் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள குளங்கள் முறையாக புனரமைக்கப்படாமை வெள்ளப் பெருக்கிற்கான பிரதான காரணமாகும்.

அத்துடன் மட்டக்களப்பு முகத்துவாரத்தை அண்மித்த ஆறுகளையும் மறுசீரமைப்பு செய்ய வேண்டும். ஆழம் குறைந்தமையானது இதற்கான காரணம் ஆகும். குறைந்தளவு மழை பெய்தாலும் மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்படுகின்றனர். இவ்வருடமும் மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டனர்.

இதனால் எம்மக்களுக்கான வெள்ள நிவாரண நிதியானது ஒவ்வொரு வருடமும் ஒதுக்கப்பட வேண்டும் நவகிரியும், குளபுனரமைப்பும் இத்திட்டத்தில் காணப்படுகிறதா? ஆறுகள், மற்றும் குளங்களை முறையாக புனரமைத்தால் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதை தடுக்க முடியும்.

ரூகம் செயற்திட்டத்தின் MCM இனது அளவானது 58. என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அனால் இதன் தேவையான அளவானது MCM 90 ஆக செயல்படுத்தப்பட வேண்டும். அத்துடன் இத் திட்டத்துக்கான போதியளவு கடன் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப் பெறாததன் காரணமாக இச்செயற்திட்டத்தை இடைநிறுத்துவதாக குறிப்பிடப்படுகிறது.

உண்மையாகவே இத் திட்டமானது கைவிடப்படக் கூடாது. 90 Mcm அளவினை நாங்களும், மக்களும் கேட்கின்றோம். இடைநடுவில் இவ் திட்டத்தை நிறுத்தக் கூடாது. இத் திட்டமானது எம் மக்களுக்கான ஓர் அத்தியாவசிய தேவை ஆகும்.

இந்தத் திட்டமானது சரியான முறையில் செய்யப்படுமிடத்து 15,000 தொடக்கம் 20,000 ஏக்கர் அளவில் வருடங்களுக்கு இரண்டு முறை விவசாயம் மேற்கொள்ள முடியும். மீன் பிடி துறையையும் அபிவிருத்தி செய்ய முடியும்.

இதைத் தவிர பிற தொழில்களையும் மற்றும் மக்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்திக்கொள்ள முடியும். ஆனால் தற்போதுள்ள முந்தினா ஆறு திட்டத்தினை நிறுத்தியே இதனை செய்ய வேண்டும். இப்போது இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது நிச்சயமற்றதாக காணப்படுகின்றது. ஏனெனில் ஆற்றுப் படுக்கையில் சட்ட விரோதமாக மணல் அகழ்வதைத் தவிர வேறு செயற்பாடுகள் இத் திட்டத்திற்காக முன்னெடுக்கப்படவில்லை முன் எடுக்கப்பட்டதாகவும் தெரியவில்லை.

எங்களுடைய உரிமை சார்ந்த கவனஈர்ப்பு போராட்டமான க2க போராட்டத்திற்கு கண்டனம் தெரிவிக்கப்படுகின்றதே தவிர இவ்வாறான எமது மக்களுக்கு பயனுள்ள பொருளாதாரத்தை மற்றும் வாழ்வாதாரத்தை கட்டமைக்கும் சிறந்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்படுவதில்லை. எமது மக்களுக்கு உரிமையும் இல்லை அபிவிருத்தியும் இல்லை. எனக் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையின் அதியுயர் சேவை போட்டிப் பரீட்சையில்...

203 திறந்த மற்றும் 54 மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்ளுக்காக பரீட்சை நடைபெற்றிருந்த நிலையில் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர்பட்டியலை இலங்கை பொதுச் சேவை ஆணைக்குழு செவ்வாய்கிழமை(09) வெளியிட்டுள்ளது.

54 பேரினை தெரிவு செய்வதற்காக நேர்முகத் தேர்வுக்கு தெரிவாகியுள்ள 69 பேர்களுடைய பெயர் விபரங்கள் வெளியாகியுள்ள நிலையில் தமிழ்பேசும் மாணவர்கள் எவரும் நேர்முக தேர்வுக்கான பட்டியலில் உள்ளடக்கப்டவில்லை என்பது அனைவரிடத்திலும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக பரீட்சாத்திகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த முறை 2017இல் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையில் 47 பேர் தெரிவாகியிருந்த நிலையில் 17 பேர் தமிழ் பேசும் சமூகத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி சித்தியடைந்ததுடன் மட்டுப்படுத்தப்பட்ட பிரிவில் அகில இலங்கை ரீதியில் யாழ்ப்பாணத்தினை சேர்ந்த பரணிதரன் மற்றும் சிவராஜா ஆகியோர் முதல் இரண்டு இடங்களை பெற்றிருந்ததுடன் இம்முறை வெளியாகியுள்ள பெறுபேறுகளின் படி தமிழ் பேசும் மாணவர்கள் எவரும் தெரிவாகவில்லை என்பது கவலையளிப்பதுடன் இதுதொடர்பில் பலத்த கேள்வியை அனைவரிடத்திலும் ஏற்படுத்தியுள்ளது. கடந்த முறை 43 பேரில் 17 தமிழ் மாணவர்கள் சித்தியடைந்ததுடன் முதல் இரண்டு இடங்களையும் தமிழர்களே பெற்றிருந்தார்கள் இம்முறை தமிழ்பேசும் மாணவர்கள் எவருமே தெரிவாகமல் போனமைக்கான காரணம் என்ன என பலரும் கேள்வியெழுப்புகின்றனர்.

SLAS(Open) நிர்வாக சேவை திறந்த பரீட்சையிலும் கூட கடந்த முறை முதலிடத்தினை தமிழ் மாணவர் ஒருவரே பெற்றுருந்ததுடன் கணக்காளர் சேவை பரீட்சை பெறுபேறுகளில் அதிகளவு தமிழ் மாணவர்கள் சித்தியடைந்ததாக குறிப்பிட்டு பெறுபேறுகள் இரத்து செய்யப்பட்டு மீள பரீட்சை நடாத்தப்பட்டிருந்த நிலையில் ஏறாவூர் பிரதேசத்தை சேர்ந்த தமிழ் பேசும் ஒருவர் மட்டுமே இப்பரீட்சையில் சித்தியடைந்திருந்தார்.

எதிர்காலத்தில் இலங்கை நிர்வாக சேவை திறந்த பரீட்சை மற்றும் கணக்காளர் சேவை பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியிருப்பதனால் மேலும் வெளியாகவுள்ள பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டுவிடுமோ என தமிழ்பேசும் மாணவர்கள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

தற்போதைய நிலையில் இவ்வாறான திட்டமிட்ட புறக்கணிப்பு தொடருமாக இருந்தால் எதிர்காலத்தில் உயரிய பதவிகளிலும் தமிழ்பேசும் கல்வி சமூகம் உருவாக வாய்ப்பே இல்லை இதற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என கல்விமான்கள், புத்திஜீவிகள் உள்ளிட்ட பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

# மட்டக்களப்பில் முறையற்ற வெளிநாட்டுப் பயணத்தினை தவிர்த்தலுக்கான விழிப்பூட்டல் செயலமர்வு









(ரக்ஸனா)

சட்டவிரோதமான முறையில் முறையற்ற வெளிநாட்டுப் பயணத்தினை தவிர்ப்பதற்கான விழிப்பூட்டல்களை பொதுமக்களுக்கு வழங்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வொன்று காணிப்பிரிவிற்கான மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. நவரூபரஞ்ஜினி முகுந்தன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மாவட்ட செயலக விளையாட்டு அபிவிருத்திப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வுக்கு புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு அனுசரணை வழங்கியுள்ளது. விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் பயிற்றுவிப்பாளர்களுக்கான செயலமர்வினூடாக பிரதேசத்திலுள்ள புலம்பெயரும் இளைஞர் யுவதிகளுக்கு விழப்பூட்டலை வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது.

புலம்பெயர்தல் பாதுகாப்பாக இருப்பதற்கே என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற இச்செயலமர்வில் சட்டவிரோதமான மற்றும் முறையற்ற வெளிநாட்டுப் பயனத்தினால் ஏற்படும் ஆபத்துகள் மற்றும் விபரீதங்கள் தெழிவுபடுத்தப்பட்டு முறையான வெளிநாட்டுப் பயணங்களுக்கான வழிமுறைகள் எடுத்துக்காட்டப்பட்டன.

இச்செயலமர்வில் மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டுப் உத்தியோகத்தர் வீ. ஈஸ்வரன், புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பின் இணைப்பாளர் திருமதி. ஆர. மயுரன் மேரி, மட்டக்களப்பு பிரதேச பொதுச்சகாதார பரிசோதகர் ஏ. ராஜ்குமார், விளையாட்டு உத்தியோகத்தர்கள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.




# மன்னாரிலிருந்து காணாமல்போன மூன்று மீனவர்களும் பத்து தினங்கள் கடந்தும் இன்னும் வீடு திரும்பவில்லை

( வாஸ் கூஞ்ஞ)

மன்னாரில் மீன் பிடிக்காகச் சென்று கடலில் காணாமல்போன மூன்று மீனவர்கள் பத்து தினங்கள் கடந்தும் இன்னும் கண்டு பிடிக்கவில்லையென இவர்களின் குடும்பத்தார் மன்னார் மாவட்ட பிரடிஜகள் குழுவிடம் முறையீடு செய்து கண்டு பிடிப்பதற்கான உதவியையும் கோரி நிற்பதாக தெரிவிக்கப்படுகின்றது. கடற்படையினர் முயற்சிகள் எடுக்கப்பட்டும் அவர்களின் நிலைகளை ?ரெடார்? மூலமும் இன்னும் கண்டு பிடிக்க முடியவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை (30.01.2021) மன்னார் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கொண்ணையான்குடியிருப்பு கிராமத்தைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் கண்ணன் (வயது 53), பாண்டியன் (வயது 23) செபஸ்ரியான் கொட்வின் (வயது 31) ஆகிய மூவரும் ஒரு படகில் வழமை போன்று மன்னார் தென்கடல் பரப்பில் தூண்டில் மூலம் மீன்பிடிக்காக ஓலைத்தொடுவாய் துறைமுகத்திலிருந்து புறப்பட்டுள்ளனர்.

இவர்கள் அடுத்த தினம் கடலில் இருந்து தங்களின் படகில் எரிபொருள் தீர்ந்து விட்டதாகவும் கடலில் நங்கூரம் இட்டும் அது பலன் கொடுக்காத நிலையில் தாங்கள் கடலில் படகுடன் வலிந்து செல்வதாக கரையிலிருந்த தங்கள் உறவினர்களுக்கு மொபையில் மூலம் தகவல் கொடுத்துள்ளனர்.

இது தொடர்பாக காணாமல் போனவர்களின் உறவினர்கள் மன்னார் கடற்தொழில் திணைக்களம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர்களிடம் முறையீடு செய்ததைத் தொடர்ந்து இவர்களை மீட்பதற்கான உதவிகளை கடற்படையினரிடம் கோரி இருந்தனர்.

ஆனால் நேற்றுடன் இவர்கள் காணாமல் போய் பத்து தினங்கள் கடந்தும் இவர்களை கண்டு பிடிக்கப்படாத நிலையிலேயே இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடற்படையினர் இவர்களை கண்டு பிடிப்பதில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் கடற்படையினரின் ?ரெடாரிலும்? இதுவரை இவர்களைப்பற்றிய நிலைகள் தெண்படவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கடற்தொழில் திணைக்களத்தினூடாக தெரியவருகின்றது.

இருந்தும் காணாமல் போனவர்களின் உறவினர்கள் மன்னார் பிரடிஜகள் குழுவிடம் சென்று தொடர்ந்து இவர்களை கண்டு பிடிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கோரி நிற்கின்றனர்.









# வங்கியை கொள்ளையடித்த மத்தியவங்கி கொள்ளையர்கள் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு காரணமாக இருந்தவர்கள் கைது செய்யப்படவேண்டும்

## இராஜாங்க அமைச்சர். எஸ். வியாழேந்திரன்

(கனகராசா சரவணன்)

வங்கியில் கொள்ளையடிப்பார்கள் ஆனால்; வங்கியையே கொள்ளையடித்த மத்திய வங்கி கொள்ளையர்கள் மற்றும் ஏப்பிரல் 21 உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல் மேற்கொள்ள காரணமாக இருந்தவர்கள் பின்புலத்தில் இருந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன்நிறுத்தப்பட்டு தண்டனை வழங்கவேண்டும் என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

கடந்த 2019 சீயோன் தேவாலய குண்டுதாரியின் உடற்பாகங்களை இந்து மயானத்தில் புதைத்தற்கு எதிர்ப்பு தெரிவித்து மேற்கொண்;ட ஆர்ப்பாட்டம் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் உட்பட 5 பேருக்கு எதிராக பொலிசார் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் செய்த வழக்கு விசாரணை செவ்வாய்கிழமை (9) நீதிமன்றில் ஆஜராகியனர் இதன்போது வழக்கு விசாரணை எதிர்வரும் மாச்17ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றில் இருந்து வெளியேவந்த இராஜயாங்க அமைச்சர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.



கடந்த உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலால் இடம்பெற்றது இதில் மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திலே முகமட் ஆசாத் இந்த பயங்கரவாத தாக்குதலை மேற்கொண்டதால் 30 மேற்பட்வர்கள் ஸ்தலத்திலே உயிரிழந்தனர் 70 மேற்பட்டோர் படுகாயமடைந்தனர் இதில் படுகாயமடைந்தவர்குள் கூட சில நாட்கள் மாதங்கள் கழிந்து இறந்தார்கள். ஆகவே இவ்வாறு மிலேச்சத்தனமான கொடூரமான தாக்குதல் சீயோன் தேவாலயத்தில் மேற்கொண்ட இந்த பயங்கரவாதியின் உடல்பாகங்களை கள்ளியங்காடு இந்து மயானத்தில் புதைத்தனர் இதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனா.;

அப்போது மக்கள் பிரதிநிதி என்ற அடிப்படையில் நானும் எனது இணைப்பு செயலாளர் யோ.றொஸ்மன் மாநகரசபை உறுப்பினர் திருமதி செல்வி, திருமதி அ.சுசிகலா மற்றும் சி.அனோஜன் ஆகியோர் கலந்து கொண்டோம் அப்போது பொலிசார் கண்ணீர் புகைகளை அடித்து தாக்குதலை மேற்கொண்டனர் இதில் என்னைத்தவிர ஏனைய நான்கு பேரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

மக்களுடைய போராட்டத்திலே ஜனநாயகரீதியாக சட்டத்திற்கு முரனாக இல்லாது ஈடுபட்டவர்கள் அவர்கள் மீது பொலிசாரால்; தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் கலகம் விளைவித்தாக எனக்கும் அவர்களுக்கும் வழக்கு தொடர்ந்துள்ளனர். அந்த வழக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பின்னர் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கின்றது.

ஜனாதிபதி கூட இரண்டு விடயத்தை ஆணித்தரமாக கூறியிருக்கின்றார். ஒன்று மத்தியவங்கி கொள்ளையை மேற்கொண்டவர்கள்;. இரண்டாவது ஏப்பிரல் தற்கொலை குண்டு தாக்குதல் காரணமாக இருந்த பின்புலத்தில் இருந்த யாராக இருந்தாலும் அவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன்நிறுத்தப்பட வேண்டும் இந்த விடயத்திலே ஜனாதிபதி உறுதியாகவும் தெளிவாகவும் இருக்கின்றார் அதைத்தான் நாங்களும் கூறுகின்றோம் என்றார்.

# காத்தான்குடி உமர் சன சமூக நிலையத்தின் உதவும் கரங்கள் வேலைத்திட்டம்




(ரீ.எல்.ஜவ்பர்கான்)

காத்தான்குடி உமர் சன சமூக நிலையத்தின் உதவும் கரங்கள் வேலைத்திட்டத்தின் ஊடாக கஷ்டநிலையிலுள்ள குடும்பங்களின் மாணவ மாணவிகளுக்கான கற்றல் உபகரணங்கள் பாடசாலைபை வழங்கும் நிகழ்வு நேற்று அல்-உமர் பாலர் பாடசாலை மண்டபத்தில் செயலாளர் ஏ.எல். முஹம்மத் இர்ஷாத் தலைமையில் இடம்பெற்றது இன் நிகழ்வில் உமர் சன சமூக நிலைய நிர்வாகிகள் பாடசாலை ஆசிரியைகள் பெற்றோர்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்

தெரிவு செய்யப்பட்ட மாணவ மாணவிகள் அதிகமானோர் பயன்பெற்றனர்.

மேலும் கஷ்ட நிலையிலுள்ள மாணவ மாணவிகளுக்கு உதவும் முயற்சிகள் எடுக்க படுகின்றன எமது முயற்சிகளுக்கு பயன்கிடைத்தால் அடுத்த கட்ட உதவிகளை வழங்க உரிய துரித ஏற்பாடுகளை செய்யும் எனவும்

எமது சமூக பணிகள் மூலம் சமூகம் வலுப்பெற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுமெனவும் அங்கு உரை நிகழ்த்திய அமைப்பின் தலைவர் குறிப்பிட்டார்.

# மன்னார் மாவட்டத்தில் புதிய பிரதேச செயலகப் பிரிவு உருவாக்கத்துக்கான முன்னேற்பாடு பூர்த்தி

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் புதிய பிரதேச செயலகம் ஒன்று 17 கிராம அலுவலகர் பிரிவுகள் உள்ளடக்கப்பட்டு உருவாக்கப் படுவதற்காக பரிந்துரைக்க்பட்டு இவை மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட பின் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு சம்பந்தப் பட்ட அமைச்சுக்கு அனுப்பி வைப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் புதிதாக பிரதேச செயலகம் ஒன்று உருவாக்குவதற்கான பரிசோதனை கூட்டம் ஒன்று மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இவ் கூட்டம் மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் திங்கள் கிழமை (08.02.2021) வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஒருங்கினைப்புக் குழுத் தலைவருமான கே.காதர் மஸ்தான் தலைமையிலும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் திலீபன் மற்றும் ஏனைய வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதிகளின் பங்களிப்போடும் அத்துடன் இதனுடன் தொடர்புடைய சகல திணைக்களங்கள் கிராமிய அபிவிருத்தி



அபை;புக்களின் பிரதிநிதிகள் இவ் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் தற்பொழுது இருக்கும் ஐந்து பிரதேச செயலகத்துடன் மேலும் மாந்தை வடக்கு என்ற ஒரு புதிய பிரதேச செயலகத்தை 1% கிராம அலுவலகத்தை உள்ளடக்கியதாக உருவாக்குவதற்கான முன்னெடுப்பு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இவ் ஒத்திசைவு திட்டத்தை எதிர்வரும் மன்னார் மாவட்ட அபிவிருத்தி கூட்டத்தில் இதற்கான அனுமதியைப் பெற்று வர்த்தகமானியில் பிரசுரிப்பதற்காக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இவ் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

உருவாக இருக்கும் இவ் புதிய பிரதேச செயலகப் பிரிவில் தீர்மானிக்கப் பட்டதுக்கு இணங்க உள்ளடக்கப்பட இருக்கும் கிராம அலவலகர்கள் பிரிவுகள் பின்வருமாறு

காயா நகர், பெரியமடு, பாலமடு, விடத்தல் தீவு மேற்கு, விடத்தல் தீவு வடக்கு, விடத்தல் தீவு கிழக்கு, விடத்தல் தீவு மத்தி, கோவில்குளம், கள்ளியடி, ஆத்திமோட்டை, அந்தோனியார்புரம், இலுப்பைக்கடவை, கூராய், பெரியமடு கிழக்கு, பாலியாறு, தேவன்பிட்டி, வெள்ளாங்குளம் ஆகிய 17 கிராம அலுவலகர் பிரிவுகள் இவ் புதிய பிரதேச செயலகப் பிரிவுகள் அடக்குவதற்காக பரிந்துரைக்கப் பட்டுள்ளன.

# மக்களுக்கு சேவை செய்ய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்கள் அரச உத்தியோகத்தர்கள்







(ந.குகதர்சன்)

பொதுமக்களின் தேவைகள் மற்றும் பிரச்சனைகளை அறிந்து அவர்களுக்கு சேவை செய்வதுடன், நாட்டை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டவர்கள் தான் அரச உத்தியோகத்தர்கள் என கோறளைப்பற்று மத்தி உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.ரமீஸா தெரிவித்தார்.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவின் பிறைந்துறைச்சேனை 206ஏ கிராம சேவகர் பிரிவில் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் கௌரவிப்பு நிகழ்வும் பிறைந்துறைச்சேனை சாதுலியா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற போது கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்சொன்னவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

அரச உத்தியோகத்தர்கள் பொதுமக்களுக்கு சேவையாற்றுவதற்கு பிரதேச சமூக மட்ட அமைப்புக்கள், கிராம மட்ட அமைப்புக்கள் என்பன உறுதுணையாக இருக்க வேண்டும். அப்போது தான் அரச உத்தியோகத்தர்கள் சேவையை வழங்குவதற்கு இலகுவாகவும், பிரதேச அபிவிருத்தியில் முன்னோக்கிச் செல்ல வழிவகுக்கும்.

சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் செயற்பாடானது ஏனைய திணைக்களுக்கு ஒரு முன்னோடியான செயற்பாடாக அமைகின்றது. அரச உத்தியோகத்தர்கள் வெளி பிரதேசங்களில் இருந்து வருகை தருபவர்கள். ஆனால் சமுதாய அடிப்படை அமைப்புக்கன் உங்களது பிரதேச தேவைகளை நன்கு அறிந்தவர்கள்.

எனவே இங்கு இரண்டு குழுவும் இணையும் போது ஒரு வலுவான கட்டமைப்பு தோற்றுவிக்கப்பட்டு பிரதேச மக்களுக்கு சரியான முறையில் உதவிகளை சென்றடைவதற்கு ஒரு ஊண்டுகோளாக அமைகின்றது. சமுர்த்தி திணைக்களம் வறிய மக்களை தரம் உயர்த்தும் வகையில் தங்களது சேவைகளை மேற்கொண்டு வருகின்றது என்றார்.

இந்நிகழ்வில் ஓட்டமாவடி சமுர்த்தி தலைமை முகாமையாளர் எம்.ஐ.ஏ.அஷீஸ், வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் எம்.தையூப்;, பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.நசீர், சமுர்த்தி சமுக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.ஐயூப்கான், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவை அதிகாரி, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்;, சமுர்த்தி பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது சிறந்த முறையில் செயற்பட்டு வரும் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகளுக்கு அதிதிகளால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களினால் கிராம சேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் சேவையை பாராட்டி நினைவுப் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப் பட்டது.

# சிறுபான்மை மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் முன்னாள் கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார்

(இ.சுதாகரன்)

ஒரே நாடு, ஒரே தேசம் எனும் தாரகை மந்திரத்தினைப் போதிக்கும் அரசாங்கமானது சிறுபான்மை மக்களின் உரிமையினை அடக்கி ஆழ நினைப்பது அடிப்படை மனித உரிமைச் செயற்பாடாகும்.இவ்வாறான அடக்கு முறைகள் நீக்கப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே சுதந்திர இலங்கை உதயமாகும்.

இவ்வாறு செவ்வாய்க்கிழமை காலை தமது மட்டு மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது கருத்துத் தெரிவிக்கும் போதே முன்னாள் கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது வடகிழக்கில் சிறுபான்மை மக்களினாலும் மக்கள் பிரதி நிதிகளினாலும் முன்னெடுக்கப்பட்ட பொத்துவில் முதல் பொறி கண்டி வரையான கண்டனப் பேரணியானது சிறுபான்மை மக்களுக்கு கிடைத்துள்ள பாரிய வெற்றியாகும்.அரச தரப்பினராலும் ஒட்டுக்குழுக்களாலும் பல தடைகள் ஏற்படுத்தப்பட்ட நிலையிலும் தடைகளைத் தாண்டி பேரணி முன்னெடுக்கப்பட்டு நிறைவுற்றிருக்கின்றது. இந்தப் பேரைணி சர்வ தேசத்தின் பார்வையினை திசை திருப்பியிருக்கின்றது.

அண்மையில் இலங்கை 73 ஆவது சுதந்திரதினத்தினைக் கொண்டாடிய போது சிறுபான்மை மக்களின் மொழியினை நீக்கி உரிமையினை மறுத்து தேசிய கீதம் இசைக்கப்பட்டமை வேதனை தரக்கூடிய விடயமாகும்.இவ்வாறான சூழ் நிலையில் அரசாங்கத்தினால் கொண்டுவரப்படுகின்ற உரிமை மீறல் பொதியினை ஏற்க சிறுபான்மை மக்கள் தயார் இல்லை இலங்கையில் பேரினவாதம் தலைதூக்கி தாண்டபம் ஆடுகின்றது

அபிவிருத்திக்காக எமது உரிமையினை இழக்க முடியாது.சிலர் அபிவிருத்தி எனும் மாயைக்குள் சிக்கி மக்களை ஏமாற்றி வருகின்றனர். இது தொடர்பாக மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.மற்றவரிடம் கையேந்தும் சமூகமாக சிறுபான்மை இருக்க முடியாது மாற்றம் உருவாக வேண்டும்.எனத் தெரிவித்தார்.

# எதிரியையும் ஜெயிக்கலாம் நூல் வெளியீடு

(சஞ்சயன்)

கல்முனை பாண்டிருப்பைச் சேர்ந்த பல்துறைக் கலைஞர் அகரம் செ.துஜியந்தன் எழுதிய, எதிரியையும் ஜெயிக்கலாம் நூல் வெளியீடு, கல்முனை வடக்கு பிரதேசசெயலக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.







மூத்த கவிஞர் மு.சடாட்சரன் தலைமையிலும் பாண்டிருப்பு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மு.சபாரெத்தினத்தின் ஆசியுடனும் இடம்பெற்ற இந் நிகழ்வில், பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், கல்முனை ஆதரா வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் இரா.முரளீஸ்வரன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

நூலின் முதற் பிரதியினை ஓய்வு நிலை அதிபர் மு.சுபைந்திரராஜா பெற்றக்கொண்டதுடன், நூலாசிரியர் அறிமுகத்தினை ஓய்வு நிலை அதிபர் இ.இராஜரெத்தினமும், எழுத்தாளர் எஸ்.அரசரெத்தினம் நூல் சிறப்புரையினையும் ஆற்றியிருந்தார்.

# செங்கலடி பதுளை வீதி இராஜபுரம் கிராமத்தில் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் வீடுகளுக்கு சேதம்





(யசோதரன்)

செங்கலடி பதுளை வீதி இராஜபுரம் கிராமத்தில் கிராமத்தில் இரவுநேரங்களில் காட்டுயானைகள் உட்புகுந்து வீடுகளையும் பயன்தரும் மரங்கள், தோட்டப் பயிரினங்களையும் துவசம் செய்து வருவது நாளுக்கு நாள் அதிகரித்து காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மரப்பாலம் கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட இராஜபுரம் கிராமத்தில் காட்டு யானைகள் மக்கள் குடிமனைப் பகுதிகளுக்குள் புகுந்து வீடுகளையும் பயன்தரும் மரங்கள், தோட்டப் பயிரினங்களையும் சேதப்படுத்தி வருகின்றன. இப்பிரதேசத்தில் யானைகள் கிராமத்துக்குள் புகுந்து தாம் செய்கின்ற பயிர்களையும் மற்றும் தமது வீடுகளையும் உடைத்துவருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். ஆனால் பிரதேசத்திற்கு எவ்வித பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக யானை வேலி கூட அமைத்து தரப்படவில்லை எனவும் கிராமத்திற்குள் இரவில் நடமாடும் யானைகள் காலையில் காட்டை நோக்கிப் போவதாகவும் மீண்டும் மாலையில் பிரதேசத்துக்குள் வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரவிரவாக மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து யானையைக் களைப்பதாகவும் இதனால் இது தங்களது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த கிராமத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் கஷ்டப்பட்டு பராமரித்து வந்த பயன்தரும் மரங்களையும் தோட்டப் பயிரினங்களையும் தொடர்ந்தும் யானைகள் சேதப்படுத்தி வருவதால் வாழ்வாதாரத்தை இழந்து விரக்தி நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தோட்ட பயிர்களையும் வீடுகளையும் அடிக்கடி காட்டு யானைகள் சேதப்படுத்தி வருகின்றன. இதனால் பல்வேறு நட்டங்களுக்கு மக்கள் முகங்கொடுத்து வருகின்றனர்.

யானைகளின் அட்டகாசம் தொடர்பாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் உட்பட பல்வேறு தரப்பினருக்கும் தெரியப்படுத்தியும் யாரும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென மேற்படி கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# கிராமத்திற்குள் புகுந்து தென்னை மரங்களை துவம்சம் செய்த யானைகள்





(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி பிரதேச கிராமத்திற்குள் திங்கட்கிழமை இரவு புகுந்த யானைகளினால் தென்னை மரங்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டமாவடி பாலத்திற்கு அருகில் உள்ள இரண்டு தனியாரின் காணிக்குள் திங்கட்கிழமை இரவு புகுந்த மூன்று யானைகள் பயன் வழங்கிக் கொண்டிருக்கும் பன்னிரண்டு தென்னை மரங்களை அடியோடு பிடுங்கி அழித்து நாசம் செய்துள்ளது. குறித்த யானைகள் காவத்தமுனை வழியாக ஆற்றை கடந்து ஓட்டமாவடி பாலத்திற்கு அருகில் உள்ள தனியாரின் காணிக்குள் புகுந்து தென்னை மரங்கள் மற்றும் வேலிகளை துவம்சம் செய்துள்ளது.

ஓட்டமாவடி பிரதேச கிராமத்திற்குள் இரவு வேளையில் யானை புகுந்து தென்னம் தோட்டத்திற்குள் சென்று துவம்சம் செய்த நிலையில் மக்கள் குடியிருப்புக்குள் வந்து மக்களையும், வீடுகளையும் சேதப்படுத்தும் நிலைமை காணப்படலாம் என மக்கள் அச்சம் கொள்கின்றனர்.

# சம்மாந்துறை பிரதேசசபை உறுப்பினர் ஜெயச்சந்திரன் இராஜினாமா!

( வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை பிரதேசசபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினரும் அம்பாறை மாவட்ட ஸ்ரீல.சு.கட்சி அமைப்பாளருமான வி.ஜெயச்சந்திரன் தனது உறுப்பினர் பதவியை நேற்று(9) செவ்வாய்க்கிழமை பகல் இராஜினாமாச் செய்துள்ளார்.

வளத்தாப்பிட்டியைச்சேர்ந்த திரு.ஜெயச்சந்திரன் நேற்று தனது இராஜினாமாக்கடிதத்தை பிரதேசசபைத்தவிசாளரிடம் கையளித்தார். அம்பாறை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவரது உறுப்பினர் பதவியை பட்டியலிலுள்ள திருமதி குலமணி தவசீலனுக்கு வழங்குமுகமாக இவ் இராஜினாமாவைச் செய்துள்ளார்.

திரு.ஜெயச்சந்திரன் 2018.02.10 ஆம் திகதி நடைபெற்ற சம்மாந்துறை உள்ளூராட்சிசபைத்தேர்தலில் வளத்தாப்பிட்டி வட்டாரத்தில் ஸ்ரீ.ல.சு.கட்சி சார்பாக போட்டியிட்டு 1032வாக்குகளைப்பெற்று உறுப்பினரானார்.

அன்றைய களநிலைவரப்படி ஸ்ரீல.சு.கட்சியின் ஆதரவு ஆட்சியமைக்க தேவைப்பட்டதால் அவர் கட்சியால் உபதவிசாளராக நியமிக்கப்பட்டார். அத்தருணம்; பேசிக்கொண்டதற்கமைவாக இரு வருடங்களின் பின்னர் தனது சகஉ



றுப்பினரான அச்சிமொகமட்டிற்கு தனது உபதவிசாளர் பதவியை இராஜினாமாச்செய்து 2020.02.11 ஆம் திகதி மனச்சாட்சிப்படி ஒப்படைத்துவிட்டு உறுப்பினராகப்பணியைத்தொடர்ந்தார். இந்நிலையில் தன்னுடன் தனதூரில் இணைந்து தேர்தல் வெற்றிக்கு பக்கபலமாக நின்ற திருமதி குலமணிக்கு தனது உறுப்பினர் பதவியை மனச்சாட்சிப்படி ஒப்படைப்பதற்காக தற்போது இராஜினாமாச்செய்துள்ளார்.

அம்பாறை மாவட்ட ஸ்ரீல.சு.கட்சி அமைப்பாளரான வி.ஜெயச்சந்திரன் அவரது சேவைக்காலத்தில் பல கோடிருபாக்களை கொணர்ந்து தமிழ்ப்பிரதேசங்களில் பல அபிவிருத்திவேலைத்திட்டங்களை செய்துள்ளார். இறுதியாக தற்போது மல்வத்தை கோவில் வீதிக்கு 1கோடி ருபா பெறுமதியான எல்ஈடி பல்புகளை பொருத்திவருவது குறிப்பிடத்தக்கது





திருகோணமலை கன்னியா இராவணேஸ்வரன்தமிழ் வித்தியாலயத்தின் 70வது நிறைவு தினம் வித்தியாலய அதிபர் தா. சிவானந்தம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கேக் வெட்டி கொண்டாடியதுடன் நினைவாக பல்வேறு நிகழ்வுகளும் நடைபெற்றது.

பொன்ஆனந்தம்

# திருகோணமலை துறைமுக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தருக்கு கோவிட் - 19 தொற்று உறுதி

(எப்.முபாரக்)

திருகோணமலை துறைமுக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தருக்கு கோவிட் - 19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் நேற்று(9) சிகிச்சைக்காக சென்ற பொலிஸ் உத்தியோகத்தருக்கே பரிசோதனைகளின் போது இவ்வாறு கோவிட் - 19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனை விடயத்துக்கு பொறுப்பான வைத்திய அதிகாரி தெரிவித்தார். பொலிஸ் உத்தியோகத்தருடன் நெருங்கி பழகிய மற்றைய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அன்டிஜென் பரிசோதனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதேவேளை கந்தளாய் பிரதேசத்தில் இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், திருகோணமலை மாவட்டத்தில் தேவைக்கேற்ற விதத்தில் பிசிஆர் மற்றும் அன்டிஜென் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் தெரிவித்துள்ளது. மேலும் பொது மக்கள் தொடர்ந்தும் முகக் கவசங்களை பாவிக்குமாறும் சமூக இடைவெளிகளை தொடர்ந்தும் பேணுமாறும் சுகாதாரத் திணைக்களம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# கிண்ணியா நகர சபை உறுப்பினர் மதில் மேல் ஏறி போராட்டம்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கிண்ணியா எழில் அரங்கு மைதானத்தின் நீர் இணைப்பு, மின் இணைப்பு கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் புனரமைப்பு பணிகள் நடைபெறுகின்ற போது ஒப்பந்தக்காரர் களினால் பாவிக்கப்பட்டு நிலுவை காரணமாக துண்டிக்கப்பட்டுள்ளன.

துண்டிக்கப்பட்ட நீர் இணைப்பையும் மின் இணைப்பையும் பெற்றுத்தருமாறு கோரிக்கை வைத்து நகர சபையிலே பல பிரேரணைகளையும் கோரிக்கைகளையும் முன்வைத்தும் இதுவரை அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் மைதானத்தில் விளையாடுகின்ற வீரர்கள் மற்றும் அயல் விட்டார்கள் பாரிய தொல்லைகளுக்கும் சிரமங்களுக்கும் முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

எனவே இங்கே துண்டிக்கப்பட்ட நீரிணைபையும் மின் இணைப்பையும் விரைவாக பெற்றுத்தருமாறு கோரிக்கையை முன் வைத்து கிண்ணியா நகரசபை உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் மூதூர் தொகுதிக்கான கொள்கை பரப்பு செயலாளருமான எம். எம் மஹ்தி அவர்கள் நேற்று (09) தனிநபர் கவனயீர்ப்பு போராட்டத்தில் கிண்ணியா நகரசபையின் மதில் மேல் ஏறி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

இக் கோரிக்கையானது விரைவாக நிறைவேற்றப்படாவிட்டால் எதிர்வரும் நாட்களில் மக்களைத் திரட்டி பாரிய எழுச்சி போராட்டத்தை ஆரம்பிப்பதற்கும் தொடர்வதற்கும் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் வேள்ட் விசன் சர்வதேச தொண்டு நிறுவனத்தினால் இவ்வாண்டு மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் ஆராய்வு








(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வேள்ட் விசன் சர்வதேச தொண்டு நிறுவனத்தினால் இவ்வாண்டில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாக ஆராயும் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

சிறுவர் அபிவிருத்தி செயற்பாடுகளில் அதிகமான திட்டங்களை இம்மாவட்டத்தில் முன்னெடுத்துவரும் வேள்ட் விசன் நிறுவனம் வாகரை, கோரளைப்பற்று, செங்கலடி மற்றும் பட்டிப்பளை போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் அத்திட்டங்களை அமுல்ப்படுத்தி வருகின்றது.

இதனடிப்படையில் இவ்வாண்டு மேற்கொள்ளவிருக்கும் திட்டங்கள் தொடர்பாக அரசாங்க அதிபர் உட்பட அதிகாரிகளுக்கு நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

இதன்போது இப்பிரதேசங்களில் சிறுவர் பாதுகாப்பு, சிறுவர்களது கல்வி, ஊட்டச்சத்து குறைபாடு, சுகாதாரம், பாடசாலை இடைவிலகல் போன்ற விடயங்களை நிவர்த்திப்பதற்கான திட்டங்களும், வாழ்வாதாரம் குண்றிய குடும்பங்களுக்கான திட்டங்கள், பாடசாலை மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் போன்ற திட்டங்களும் இவ்வாண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் தெழிவுபடுத்தப்பட்டது.

இதன்போது மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. சசிகலா புண்ணியமூர்த்தி உட்பட பிரதேச செயலாளர்கள், திட்டமிடல் பணிப்பளர்கள், பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி, மாவட்ட சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் விவசாய விரிவாக்கல் பிரதிப் பணிப்பாளர், வேள்ட் விசன் நிறுவன நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர்கள் உட்பட அரச அதிகாரிகள் பலசும் பிரசன்னமாயிருந்தனர்.

கடந்த 2004 ஆம் ஆண்டிலிருந்து இம்மாவட்டத்தில் செயற்பட்டுவரும் வேல்ட்விசன் நிறுவனம் தனது பணிகளை இவ்வாண்டுடன் நிறைவு செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் பொலிசாருக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பம்





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிசாருக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றும் ஆரம்ப நடவடிக்கை இன்று செவ்வாய்க்கிழமை (09) மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பணிப்பாளர் வைத்தியளர் கிரிசுதன் தலைமையில் இடம் பெற்றது.

பாதுகாப்பு படையினருக்கு தடுப்பூசி ஏற்றம் நடவடிக்கையில் மாவட்டதிலுள்ள 14 பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிசாருக்கு இந்த தடுப்பூசி ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிபபடையில் இன்று மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் முதற்கட்டமாக மட்டக்களப்பு தலைமைய பொலிஸ் நிலையம், ஆயித்தியமலை பொலிஸ் நிலையம், ஆகிய 60 பொலிசாருக்கு தடுப்பூ ஏற்றப்பட்டுள்ளதுடன் ஏனைய பொலிசாருக்கும் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை தொடர்ந்து இடம்பெறும் என சுகாதார பணிப்பாளர் தெரிவித்தார்

சுபீட்சம்
கிழக்குச் சூரியன்
10 FEBRUARY 2021, WEDNESDAY

# பாகிஸ்தான் பிரதி உயர்ஸ்தானிகருடன் - அ.இ.ம. காங்கிரஸ் உயர்பீடம் பேச்சுவார்த்தை



**(ஏ.பி.எம்.அஸ்ஹர், எம்.எம்.ஜெஸ்மின்)**

பாகிஸ்தான் பிரதி உயர்ஸ்தானிகரை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உயர்பீடம் நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது.

இலங்கை வரவுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், சமகால அரசியலில் சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து, அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் தலைமையிலான குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொழும்பிலுள்ள பாகிஸ்தான் பிரதி உயர்ஸ்தானிகர் தன்வீர் அஹமட் பெட்டியை நேற்று (09) சந்தித்த இக்குழுவினர், நாட்டில் சிறுபான்மைச் சமூகங்கள் எதிர்கொள்ளும் அடக்குமுறைகள், முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்படுவது உட்பட முஸ்லிம்கள் அண்மைக்காலமாக எதிர்கொள்ளும் நெருக்குவாரங்கள் குறித்தும் தூதுவரிடம் எடுத்துக் கூறினர்.

இதுபற்றி கட்சியின் தவிசாளர் அமீர் அலி தெரிவித்ததாவது,

உலக சுகாதார ஸ்தாபனத்தின் (WHO) சுகாதார வழிகாட்டலுக்கு இணங்க, உலகத்தின் 190 நாடுகள் கொவிட்19 தொற்றினால் மரணிப்பவர்களுடைய உடல்களை அடக்கம் செய்கின்றன. மாறாக, இலங்கையில் மாத்திரம் கடும்போக்கு கொள்கையுடன், இந்த அரசாங்கம் தொடர்ந்தேர்ச்சியாக, எமது ஜனாஸாக்களை பலவந்தமாக எரித்து வருகின்றது. இது தொடர்பில், எமக்கு நியாயம் பெற்றுத்தர பாக். பிரதமரது விஜயம் உதவ வேண்டும். அத்துடன், இலங்கையிலும் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான வழிவகைகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை, அவர் வலியுறுத்த வேண்டும் என்பதுவும் எமது எதிர்பார்ப்பாகும்."

அத்துடன், இலங்கைக்கு பாகிஸ்தான் செய்து வருகின்ற நல்ல பல உதவிகளுக்கு நன்றிகளை தெரிவித்தனர். மேலும், இலங்கை வரும் பாக். பிரதமருடன், தாங்கள் சந்தித்துப் பேசி, தமது கருத்துக்களை தெரியப்படுத்த, ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருப்பதாகவும் மக்கள் காங்கிரஸ் குழுவினர் இச்சந்திப்பின் போது தெரிவித்தனர்.

இச்சந்திப்பில் மக்கள் காங்கிரஸின் தவிசாளர் அமீர் அலி, செயலாளர் எஸ்.சுபைர்தீன், பொருளாளர் ஹூசைன் பைலா ஆகியோர் உடனிருந்தனர்.

# அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக நெல் அறுவடை ஆரம்பம்



**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக நெல் அறுவடை தற்போது ஆரம்பமாகியுள்ளது. தற்போது மாவட்டத்தின் நாவிதன்வெளி, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, சவளக்கடை, மத்தியமுகாம், நிந்தவூர் உள்ளிட்ட பகுதிகளில் நெல் அறுவடைகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த இரண்டு மூன்று தினங்களாக தொடர்சியாக மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களில் தொடர்சியாக மழை பெய்து வருவதால் நெல் அறுவடை செய்வதில் விவசாயிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், பொத்துவில், திருக்கோவில், அக்கரைப்பற்று, நிந்தவூர், சம்மாந்துறை, காரைதீவு போன்ற தாழ்நில வயல் நிலங்கள் வெள்ளநீரில் மூழ்கியுள்ளதையும் காணக்கூடியதாக உள்ளது.



அம்பாறை மாவட்ட, காரைதீவு பிரதேச செயலக பிரிவின் அபிவிருத்திகளுக்கான இணைப்பாளராக காரைதீவு பிரதேச சபையின் பிரதித் தவிசாளர் ஏ.எம். ஜாஹீர், திகாமடுல்ல மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான டவலியு. டீ. வீரசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கான உத்தியோகபூர்வ நியமன கடிதத்தை வழங்கிவைப்பதை படத்தில் காணலாம்.

**(நூருல் ஹுதா உமர்)**

# இடைவிலகிய மாணவர்களை இனங்கண்டு பாடசாலைக்கு இணைக்கும் நடவடிக்கை



**(றியாஸ் இஸ்மாயில்)**

அக்கறைப்பற்று கல்வி வலயத்திற்குட்பட்ட அட்டாளைச்சேனை சம்புநகர் அல்-மினா வித்தியாலயத்தில் பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களை இனங்கண்டு அவர்களை பாடசாலைக்கு இணைக்கும் நடவடிக்கை நேற்று (09) பிரதி அதிபர் எம்.ஐ.ஜஃபர் ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் ஆரம்பப் பிரிவு மெய்வல்லுனர் விளையாட்டுக்குப் பொறுப்பான இணைப்பாளரும், சேவைக்கால ஆசிரிய ஆலோசகருமான AL. பாயிஸின் ஆலோசனைக்கும், வழிகாட்டலுக்கும் அமைவாக இம்மாணவர்கள் பாடசாலைக்கு இணைக்கப்பட்டனர்.

உண்மைச் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள
WWW.SUPEEDSAM.COM

# பதவியுயர்வுபெற்ற நஜீமிற்கு பாராட்டு




**(வி.ரி.சகாதேவராஜா)**

இலங்கை கல்வி நிருவாகசேவை தரம் 1ற்கு பதவியுயர்வுபெற்ற சம்மாந்துறை வலயக்கல்விப்பணிப்பாளர் எம்.எஸ். சஹதுல்நஜீமைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு சம்மாந்துறை முஸ்லிம் தேசியகல்லூரியில் நேற்று இடம்பெற்றது.

அவ்வமயம் அவருக்கு முன்னாள்அதிபர் முத்து இஸ்மாயில் பொன்னாடை போர்த்திப்பாராட்டுவதையும் முகாமைத்துவஅணியினர் கலந்துகொண்டிருப்பதையும் காணலாம்.

# தென் கிழக்கு பல்கலையின் உப வேந்தர் பதவிக்கு பலர் போட்டி

**(ரிப்தி அலி, சர்ஜுன் லாபீர்)**

தென் கிழக்கு பல்கலையின் உப வேந்தர் பதவிக்கு 11 பேர் விண்ணப்பித்துள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் ' தெரிவிக்கின்றன.

குறித்த உப வேந்தர் பதவிக்கான விண்ணப்பங்களை நேற்று செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணிக்கும் முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய 7 பேராசிரியர்களும் 4 கலாநிதிகளும் என 11 பேர் விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் உப வேந்தராக கடந்த 2009ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை ஆறு வருடங்கள் செயற்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி எஸ்.எம்.எம். இஸ்மாயில், மீண்டும் உப வேந்தர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்கு மேலதிகமாக தென் கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசாரம் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர்




ரமீஸ் அபூபக்கர், பொறியியல் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ்.எம். ஜூனைதீன், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சுற்றுல்லா பேராசிரியர் எம்.எஸ்.எம்.அஸ்லம், தென் கிழக்கு பல்கலைக்கழக கணக்கீட்டு பேராசிரியர் ஏ.எல். அப்துர் ரவூப், அதே பல்கலைக்கழக முகாமைத்துவ பேராசிரியர் பாத்திமா ஹன்ஸியா அப்துல் ரவூப் ஆகியோரும் உப வேந்தர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளனர்.

அத்துடன் தென் கிழக்கு பல்கலைக்கழக முகாமைத்துவ பேராசிரியர் எம்.பீ.எம். இஸ்மாயில், அதே பல்கலைக்கழக இயந்திரவியல் பொறியியல் பேராசிரியர் ஏ.எம். முஸாதீக், கொழும்பு பல்கலைக்கழக நிதிப் போராசிரியர் ஏ.ஏ.அஸீஸ், மலேசியவிலுள்ள மலாயா பல்கலைக்கத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இஸ்மத் ரம்ஸி ஆகியோரும் இப்பதவிக்கு விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை அடுத்த மாத நடுப் பகுதியில் இடம்பெறும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை, தற்போதைய உப வேந்தர் பேராசிரியர் எம்.எம். எம். நாஜீமின் பதவிக் காலம் எதிர்வரும் ஓகஸ்ட் 7ஆம் திகதி நிறைவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.